1973 நவம்பர் 21]

பொம்மிடி-மேட்டூர் அணை பேருந்துப்பணி

*288 வினு—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஓமலூர் வட்டம், பொம்மிடிக்கும் மேட்டூர் அணைக்கும் இடையே டேனீஸ்பேட்டை, தீவட்டிப்பட்டி, காமனேரி, மேச்சேரி வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. வீ. செல்லத்துரை: தலைவரவர்களே, என் தொகுதியிலுள்ள பொம்மிடி, ராமமூர்த்தி நகர் போன்ற இடங்களிலிருந்து அடிக்கடி பல அலுவல்கள் காரணமாக மேட்டூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் மேட்டூரில்தான் இருக்கிறது. இப்போது மேட்டூருக்குச் செல்லவேண்டுமானல் இந்த இடங்களிலிருந்து சேலத்திற்குச் சென்று, அங்கிருந்துதான் மேட்டூருக்குப் போகவேண்டும். அதனல் அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அமைச்சரவர்கள் அங்கே வந்திருந்த போதுகூட இந்தக் கோரிக்கையை எடுத்துச்சொன்னேன். அதற்கு ஆவனச் செய்வதாகச் சொன்னர்கள். ஆகவே, இனிமேலாவது மறுபரிசிலனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சாலை செப்பனிடப்பட்டு, அதன்பிறகு இதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.